அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மீதான வழக்கு:

# மறு விசாரணைக்குத் தடை: உச்சநீதிமன்றம் இடைக்கால உத்தரவு!

புதுடெல்லி, செப். 8-

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தாக புனையப்பட்ட வழக்கில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தென்னரசு ஆகியோர் விசாரணையை சந்திக்க வேண்டும் என உத்தரவிட்ட சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.





வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்ந்ததாக தொடரப்பட்ட வழக்கில் இருந்து தமிழக வருவாய்த் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் விசாரணை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நிலையில், சென்னை உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணை நடத்தியது. இருவரும் விசாரணையை எதிர்கொள்ள வேண்டும் என்றும் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் உத்தரவிட்டிருந்தார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து அமைச்சர்கள் இருவரும் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். அமைச்சர்கள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த நீதிபதிகள் ஹிருஷிகேஷ் ராய், பிகே மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த விவகாரம் குறித்து பதிலளிக்க தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பியது.

முன்னதாக, அமைச்சர்கள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் கபில் சிபல், அபிஷேக் சிங்வி ஆகியோர் விசாரணை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர்களின் வழக்குகளை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்ட நடைமுறை சரியல்ல என வாதிட்டனர்.

இதையடுத்து, அமைச்சர்கள் மீதான விசாரணைக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் இடைக்கால தடை விதித்தனர். மேலும், இந்த வழக்கு மீதான விசாரணையை நான்கு வாரங்களுக்கு ஒத்தி வைத்தனர்.



சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ மகன் திரைப்பட நடிகர் நிஷாந்த் ரூசோவிற்கும் இளையான்குடி தாலுகா கல்லடிதிடல்எட்வர்டுஜோசப் – மஞ்சுளா மேரி மகள் இ.ஸ்நேகாகேத்தரின் ஆகியோரது திருமணத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமைஏற்று வாழ்த்தினார். உடன் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., திருமதி மணிமேகலை தங்கம்தென்னரசு, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மேயர் எஸ்.முத்துதுரை, துணைமேயர் என்.குணசேகரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மருமகன் ராஜாஸ்டீபன், மகள் ஆர்.ஜெம்மாநிபிலா, க.அழகையா ஆகியோர் உள்ளார்கள்.

இன்று–அமைச்சர் தங்கம் தென்னரசுவின் நேர்முக உதவியாளர்

# இரா.பாலகுரு இல்லத் திருமணம்! கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைக்கிறார்!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்–தங்கம் தென்னரசு முன்னிலை !

விருதுநகர், செப். 8 -

அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களின் நேர்முக உதவியாளர் இரா.பாலகுரு இல்லத் திருமணத்தை தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர், கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி இன்று நடத்தி வைக்கிறார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் இரா. ஆதிலட்சுமி,நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மணிமேகலை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மேனாள் காவல்துறை தலைவர் செ.சந்திரசேகர் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், ஆகியோர் திருமணத்தில் கலந்து கொள்கின்றனர்.

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர் இரா.பாலகுரு சு. மகேஸ்வரி, ஆகியோரின் மகள் அனன்யா மற்றும் பாலமுருகன் - ஜெயா ஆகியோரின் மகன் விக்னேஷ் என்பவருக்கும் இன்று (08.09.2024-ஞாயிற்றுக் கிழமை) காலை 9 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் மதுரை ரோடு வேலம்மாள் வளாகத்தில் அமைந்துள்ள ஐடா ஸ்கட்டர் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது. இத்திருமணத்தில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

கடலூர் மேற்கு மாவட்டம்–

# ஒன்றிய, நகர, பேரூர்,வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## அமைச்சர் சி. வெ. கணேசன் அறிக்கை!

கடலூர், செப்.7-

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கினங்க, கடலூர் மேற்கு மாவட்டம், ஒன்றிய, நகர, பேரூர், வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம், கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.



நாளை(09.09.2024) - காலை :9 மணி அண்ணாகிராமம் ஒன்றியம் தொரப்பாடி பேரூர், மேல்பட்டாம்பாக்கம் பேரூர், S.K. ராகுல் மஹால், புதுப்பேட்டை

காலை: 11.30 மணி நல்லூர் தெற்கு ஒன்றியம், பெண்ணாடம் பேரூர், சரோ ரத்தின மஹால், பெண்ணாடம்

10.09.2024- காலை : 10 மணி விருத்தாசலம் தெற்கு ஒன்றியம், மங்கலம்பேட்டை பேரூர், வசந்தா திருமண மண்டபம் கருவேப்பிலங்குறிச்சி காலை: 11.30 மணி விருத்தாசலம் வடக்கு ஒன்றியம் , V.B.R. திருமண மஹால், விஜயமாநகரம்

11.09.2024-காலை: 10 மணி பண்ருட்டி நகரம் G.K. மஹால் பண்ருட்டி, காலை: 11.30 நெல்லிக்குப்பம் நகரம் ராஜலட்சுமி திருமண மண்டபம் நெல்லிக்குப்பம், மதியம்: கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம் M.P.S . திருமண மண்டபம் இருப்பு, மதியம்: 5 மணி கம்மாபுரம் மேற்கு ஒன்றியம் கனிஷ்கா திருமண மண்டபம் ஆலடி.

அதுசமயம், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதி நிதிகள் தொ.மு.ச நிர்வாகிகள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தலைமை! சிவகங்கை ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்

# மஞ்சுளா இல்லத் திருமணம்: கனிமொழி கருணாநிதி எம்.பி. நடத்தி வைக்கிறார்

## அமைச்சர்கள் பி. மூர்த்தி - எஸ். ரகுபதி - எஸ் .எஸ். சிவசங்கர் - சிவ.வீ. மெய்ய நாதன் - மு.தென்னவன் பங்கேற்பு!

சிவகங்கை, செப். 8-

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் திருமதி மஞ்சுளா பாலச்சந்தர். மகன் - பொறியாளர் பா.ஹரி பிரசாத் மதுரை மாவட்டம் மேலூர் தாலுகா வெள்ளலூர் நாட்டைச் சேர்ந்த புலி மலைப்பட்டி க.பாண்டிச் செல்வம் அம்பலம் அனிதாவின் புதல்வி பா.சந்தியா ஆகியோரது திருமணம் இன்று(8ம் தேதி -ஞாயிற்றுக் கிழமை) காலை 7:45 மேல் 8.45 மணிக்குள் மேலூர் தாலுகா கோவில் பட்டி ஏழைகாத்தம்மன் திருக்கோவிலில் நடைபெறுகிறது. இத்திருமணத்திற்கு கூட்டுறவுத்துறை அமைச்சரும் சிவகங்கை மாவட்டக் கழக செயலாளருமான கேஆர்.பெரியகருப்பன் தலைமை வகிக்கிறார்.



அமைச்சர்கள் பி.மூர்த்தி, எஸ்.ரகுபதி,எஸ்.எஸ்.சிவசங்கர்,சிவ.வீ. மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி.ரவிக்குமார். எஸ்.மாங்குடி,எம்.பிக்கள் கார்த்திப. சிதம்பரம், மாணிக்கம் தாகூர், திருமதி பிரேமா பெரியகருப்பன்,மாவட்ட துணை செயலாளர் த.சேங்கை மாறன் தொழிலதிபர் கே.பி.எஸ்.கண்ணன், அமைப்பு சாராஒட்டுநர். அணி மாநில துணை செயலாளர் ஏ.கே.பூபதி, சிவகங்கை நகர்மன்ற தலைவர் நகர்கழக செயலாளர் சி.எம். துரை.ஆனந்த், ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

திருமணத்தினை பாராளுமன்றக் குழு தலைவரும் கழக துணை பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி நடத்தி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார். திருமணத்தில் மணமக்களை மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்துக் கட்சிநிர்வாகிகள் பங்கேற்று வாழ்த்திப் பேசுகிறார்கள்.

திருமணவிழா ஏற்பாடுகளை பா. பாலச்சந்தர் திருமதி மஞ்சுளா பாலச்சந்தர், பா.பாரதி பிரசாத் ஆகியோர் செய்து வருகிறார்கள்.

## 5ஜி மொபைல் சந்தையில் 2வது இடம் - இந்தியா

புதுடெல்லி,செப்.8-

மொபைல் சந்தையில் முதல்முறையாக அமெரிக்காவை பின்னுக்குத் தள்ளி 2வது இடத்தை இந்தியா பிடித்துள்ளது.

5ஜி மொபைல் சந்தையில் முதன்முறையாக இந்தியா 2வது இடத்தை பிடித்துள்ளது என கவுன்ட்டர் பாயிண்ட் ரிசர்ச் அறிக்கை. வெளியிட்டுள்ளது. 5ஜி மொபைல் சந்தையில் அமெரிக்கா 3வது இடத்தில் உள்ள நிலையில் சீனா முதலிடத்தை தக்கவைத்துள்ளது. 2024ம் ஆண்டின் முதல் பாதியில் உலகளாவிய 5ஜி மொபைல் ஏற்றுமதி 20% வளர்ச்சி கண்டது.

